C.C No. 87/2016 10.06.2026

**PW1**. ராமச்சந்திரன் த/பெ. மணி

எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். இவ்வழக்கில் இறந்தவர் எனக்கு என்ன உறவு என்றால் செல்வம் என்பவர் சொல்லி இறந்தவரை எனது ஆட்டோவில் செல்வம் சொன்ன இடத்திற்கு அழைத்து சென்றேன். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் எனது போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியை போலீசார் அடையாளம் காட்டிதான் தெரியவந்தது என்றால் சரியல்ல, விபத்து நடந்த இடத்திலேயே பார்த்தேன். எதிரி குறித்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். பெத்தானியபுரத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 10 கிமீ இருக்கும். பெத்தானியபுரத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1/2 மணி நேரம் ஆகும். பெத்தானியபுரத்திலிருந்து எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் செல்வம் எனக்கு 10 மணிக்கு போன் செய்தார், நான் பொருட்களை எடுத்து வைத்து 1/2 மணி நேரம் கழித்து கிளம்பினேன். செல்வம் எனது உறவினரா என்றால் இல்லை. எனது ஆட்டோ ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது.

2) நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் எனது நண்பர் எழுதினாரா என்றால் நான் சொல்ல போலீசார் எழுதினார். அந்த புகார்

மனுவை படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆம். அந்த புகார் எத்தனை பக்கம் உள்ளது என்றால் வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. அந்த புகாரில் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேனா என்றால் ஆம். பழுதாகி நின்ற வண்டி எந்த பக்கம் எனது ஆட்டோ இருந்தது என்றால் அதன் முன்னாள் இருந்தது. லாரியின் வட புறமாக ஆட்டோவை நிறுத்தியிருந்தேனா அல்லது தென்புறமாக நிறுத்தியிருந்தேனா என்றால் ஆட்டோவின் முன் புறம் நிறுத்தியிருந்தேன். அவ்வாறு பழுதாகி நின்ற வண்டி ரோட்டை அடைத்து நின்று கொண்டிருந்ததா என்றால் இல்லை, கண்மாய் கரை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. கண்காய் கரை ஒட்டிதான் ரோடு உள்ளது என்றால் இல்லை, அது பெரிய ரோடு. கரைக்கும், ரோட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 வண்டி போகும் அளவிற்கு ரோடு உள்ளது. பழுதாகி நின்ற வாகனத்தை சுற்றி நான்கு புறமும் தடுப்பு வைக்கப்பட்டிருந்ததா என்றால் பின்புறம் மட்டும் வைத்திருந்தோம். மேற்கூறிய விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) பழுதாகி நின்ற வண்டியில் மணல் இருந்தது என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வரவில்லை, அந்த இடத்தில் நான் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன், அவ்வாறு வந்திருந்தால் எனக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. விபத்தானது பழுதாகி நின்ற வாகனத்தின் ஓட்டுனர் வாகனத்தை ஓரமாக நிறுத்ததால்தான் ஏற்பட்டது, அவ்வாறு நான்கு புறமும் தடுப்பு வைத்திருந்தால் அவ்வாறு விபத்து ஏற்பட்டிருக்காது, பழுதானது வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு

பெற்றுத்தரும் எண்ணத்தோடுதான் பொய்யான இந்த புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் எதிரி எந்த விபத்தையும் ஏற்படுத்தவில்லை, நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறில்லை, எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.